குருசீடர்

தரம் 05

விசேட பரீட்சை - 04
கணிதம்

நேரம் - 1 மணி 30 நிமிடம்

புள்ளி

சுட்டெண் - .....

ஆக்கம்:ஞானிதபம்நூலாசிரியர்கள்


01) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) **' பத்தாயிரத்து தொண்ணூற்றொன்பது '** இவ் எண்ணை இலக்கத்தில் எழுதினால்.

(1) 11099 (2) 10909 (3) 10099

2) 258 + ☐ = 630 வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண் யாது?

(1) 472 (2) 372 (3) 374

3)  நிழற்றப்படாத பகுதியை தசமத்தில் எழுதினால்.

(1) 0.2 (2) 0.6 (3) 0.4

4) 5kg 50g என்பதைக் கிராமில் எழுதினால்

(1) 5005g (2) 5050g (3) 5500g

5) 27458 இவ் எண்ணில் எத்தனை ஆயிரங்கள் உண்டு?

(1) 7 (2) 7000 (3) 4

6) 2769, 2697, 6318, 3279, 4716 இவ் எண்களை இறங்கு வரிசைப்படுத்தி எழுதும் போது நடுவில் வரும் எண் யாது?

(1) 3279 (2) 2769 (3) 4716

7) விரித்து வைக்கப்பட்ட புத்தகம் ஒன்றில் வலது பக்க எண் 219 எனின் அடுத்து வரும் இரு வலது பக்க எண்களும் எவை?

(1) 220, 221 (2) 221, 223 (3) 221, 222

8) வடக்கு, மேற்கு ஆகிய இரு திசைகளுக்கும் இடையே உள்ள திசைக்கு எதிர்த்திசை யாது?

(1) வடமேற்கு (2) கிழக்கு (3) தென்கிழக்கு

9) நான்கு முக்கோணங்களை மட்டும் பயன்படுத்தி செய்யக்கூடிய திண்ம உரு எது?

(1) கூம்பகம் (2) கூம்பு (3) நான்முகி

10) நான்கிலக்க எண்ணில் இறுதி எண் எது?

(1) 99999 (2) 9999 (3) 8999

02) கூட்டுக.

kg	g
12	750
+ 8	980

கழிக்குக.

kg	g
18	220
- 12	900

பெருக்குக.

kg	g
2	750
x	3

www.lkedu.lk

03) கிலோகிராம், கிராமில் தரப்பட்டவற்றை கிராமில் எழுதுக.

1) 8kg 75g - ..... 2) 12kg 620g - .....

04) கிராமில் தரப்பட்டவற்றை கிலோகிராம், கிராமில் எழுதுக.

1) 5250g - ..... 2) 16075g - .....

05) சரியான விடையினை எழுதுக.

1) 2kg 750g சீனியை எத்தனை 250g கொண்ட சிறிய பொதிகளாகக் கட்டமுடியும்?

.....

2) ஒரு பூசனிக்காயின் நிறை 5kg 50g ஆகும். அதில் விற்கப்பட்ட பின் 1kg 900g எஞ்சியி -ருந்தது. விற்கப்பட்ட பூசனிக்காயின் நிறை யாது?

.....

3) 50kg அரிசி மூடையில் இருந்தது. அதில் 3/5 பங்கு அரிசி விற்கப்பட்டது. எனின் விற்கப்படாதுள்ள அரிசியின் நிறை யாது?

.....

4) தரம் 05 வகுப்பில் 32 மாணவர்கள் உள்ளனர். ஒருவரிற்கு 175g விசுக்கோத்துக்கள் வழங்க வேண்டும். எனின் தரம் 05 வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு வழங்கத் தேவையான விசுக்கோத்தின் நிறையை கிலோகிராம், கிராமில் எழுதுக.

.....

5) 5 விருந்தினர்களுக்குப் பானம் தயாரிப்பதற்கு 150g சீனி போதுமானது. எனின் 16 விருந்தினர்களுக்குப் பானம் தயாரிப்பதற்குத் தேவையான சீனியின் அளவு யாது?

.....

06) பூந்தோட்டம் ஒன்றைப் பார்வையிடுவதற்காக ஐந்து நாட்களிலும் வருகை தந்தவர்களின் எண்ணிக்கை கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

நாள்	சிறுவர்கள்	சிறுமிகள்	ஆண்கள்	பெண்கள்
திங்கள்	437	305	243	165
செவ்வாய்	129	141	97	49
புதன்	69	83	21	127
வியாழன்	523	667	518	307
வெள்ளி	460	873	260	289

1) வியாழக்கிழமை பூந்தோட்டத்தைப் பார்வையிட வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

2) ஐந்து நாட்களும் வருகை தந்த சிறுமிகளின் எண்ணிக்கை யாது? .....

3) எந்த நாளில் அதிகமானோர் பூந்தோட்டத்தைப் பார்வையிட வந்திருந்தனர்?

.....

4) எந்த நாளில் மிகக்குறைவானோர் பூந்தோட்டத்தைப் பார்வையிட வந்திருந்தனர்?

.....

5) வெள்ளிக்கிழமை பார்வையிட வந்த சிறுவர், சிறுமியர்க்கிடையிலான எண்ணிக்கையின் வித்தியாசம் யாது? .....


www.lkedu.lk

07) இவ் எண்களை உரோமன் எண்ணில் எழுதுக.


1) 12 - ..... 3) 13 - .....

2) 19 - ..... 4) 17 - .....

08) பின்வரும் உருக்களின் சுற்றளவுகளை எழுதுக.




சுற்றளவு - .....



சுற்றளவு - .....

09) தரப்பட்ட உருவில் உள்ள செங்கோணம், கூர்ங்கோணம், விரிகோணம் என்பவற்றின் எண்ணிக்கையை எழுதுக.



செங்கோணம் - .....

கூர்ங்கோணம் - .....

விரிகோணம் - .....

10) சரியான விடையினை எழுதுக.

1) கூட்டுக $\frac{5}{10} + \frac{3}{10}$ = ... 2) கழிக்குக. $\frac{5}{7} - \frac{4}{7}$ = ...

3) வெற்றுக் கூட்டில் அடுத்து வரவேண்டிய தசம எண்களை எழுதுக.

0.3	0.6	0.9	.....	.....	.....

4) பாத்திரம் ஒன்றை நிரப்புவதற்கு 4 ℓ 900 ml நீர் தேவைப்படுகின்றது. அத்தகைய 5 பாத்திரங்களை நிரப்புவதற்குத் தேவையான நீரின் கனவளவு யாது?

.....

5) பி.ப 1.50 இற்கு வரவேண்டிய புகையிரதம் 35 நிமிடங்கள் பிந்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனின் புகையிரதம் வந்தடையும் நேரம் யாது?

.....

6) பிள்ளை ஒன்றிற்குத் தினமும் காலையிலும் மாலையிலும் உணவாக நான்கு விசுக்கோத்துக்கள் வீதம் வழங்கப்படுகின்றன. இதற்காக 96 விசுக்கோத்துக்கள் எத்தனை நாட்களுக்குப் போதுமானது?

.....


7) 5 ℓ 750 ml சோடாவினை எத்தனை 250 ml போத்தலில் நிரப்ப முடியும்?

.....

8) புதுவருட தினத்தின் போது 8 மாணவர்கள் ஒருவருக்கொருவர் கை குலுக்கிக் கொண்டனர். அங்கு இடம்பெற்ற கை குலுக்கல்களின் எண்ணிக்கை யாது?

.....

www.kedu.lk

9) 

ஒரே அளவான 5 செவ்வகங்களால் இவ் உரு உருவாக்கப்பட்டுள்ளது.வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய நீளம் யாது?

.....

10) புதுவருட தினத்திற்காக 10 மாணவர்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்து அட்டைகளைப் பரிமாறிக் கொண்டனர். அவர்கள் பரிமாறிக் கொண்ட வாழ்த்து அட்டைகளின் எண்ணிக்கை யாது?

.....

11) விரித்து வைக்கப்பட்ட ஓர் அகராதியின் வலப்பக்கத்திலுள்ள பக்க எண் 1099 ஆகும். அடுத்ததாக விரிக்கும் போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்களை முறையே எழுதுக. ....

12) ஒரு இனிப்புப் பானப் போத்தல் 3 பேரை உபசரிக்கப் போதுமானது. 17 பேரை உபசரிக்கத் தேவையான இனிப்புப் பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

.....

11) நான்கு மாணவர்கள் வைத்திருக்கும் இலக்கங்கள் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.






8	3
4	0

சமீர்

5	7
1	2

ராஜா

3	5
0	1

மீனா

7	4
2	5

அருண்

1) இவர்கள் நால்வராலும் ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண்களை எழுதுக.

சமீர் - ..... மீனா - .....

ராஜா - ..... அருண்- .....

2) இவர்கள் நால்வராலும் ஆக்கக் கூடிய மிகச்சிறிய எண்களை எழுதுக.

சமீர் - ..... மீனா - .....

ராஜா - ..... அருண்- .....

3) ஆக்கிய மிகப்பெரிய எண்களை இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக.

.....

4) ஆக்கிய மிகச்சிறிய எண்களை ஏறு வரிசைப்படுத்தி எழுதுக.

.....

5) சமீர் ஆக்கிய மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச்சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது? .....

6) மீனா ஆக்கிய மிகச்சிறிய எண்ணை சொற்களில் எழுதுக.

.....

7) ராஜா ஆக்கிய மிகப்பெரிய எண்ணை விரித்து எழுதுக.

.....

www.lkedu.lk